நெல்லைத்
தமிழ் வாசகம்

இரண்டாம் வகுப்பு

வித்துவான் ப. ஆறுமுகப் பெருமாள்,
தமிழ் ஆசிரியர்,
மதுரைத் திரவியம் தாயுமானவர் இந்துக்கலாசாலை ஸ்கூல்,
திருநெல்வேலி.

பாடப் புத்தகக் கமிட்டியில் அங்கீகரிக்கப்பட்டது
பக்கம் 27, கெஜட் 7—5—'52

எஸ். ஆர். சுப்பிரமணிய பிள்ளை
பப்ளிஷர்ஸ் : : திருநெல்வேலி

காபிரைட்] [விலை அணா 5

முதற் பதிப்பு —1948
ஐந்தாம் பதிப்பு —1953

573
031(20)
N53

முன்னுரை

'நெல்லைத் தமிழ் வாசகம்' என்னும் இப்புத்தக வரிசை தற்போது அமுலிலிருக்கும் தமிழ்ப் பாடத் திட்டத்தைத் தழுவி எழுதப்பட்டிருக்கிறது.

மாணவர்கள் பார்த்துப் பழகிய பொருள்கள் பற்றிய பாடங்களும், நீதிநெறி, உலக அறிவு, இயற்கைப் பொருள் ஞானம், சமூக சுகாதாரம் இவற்றைப் புகட்டக்கூடிய பாடங்களும், உற்சாகமூட்டும் கதைகளும் இவ்வரிசையில் எழுதப்பட்டுள்ளன. பாடங்கள் படிக்கிரமமாக அமைக்கப்பட்டிருப்பது மன்றி அவ்வப் பாடங்களுக்குரிய படங்கள் பலவும் சேர்க்கப் பட்டிருக்கின்றன. தவிர, அங்கங்கே கொடுக்கப்பட்டுள்ள கேள்விகளும், பயிற்சிகளும் மாணவர்களுக்குப் பெரிதும் பயன்படுவனவாம்.

ஆகவே, இப்புத்தகங்கள் மாணவர்களுக்கு நமது கல்வி இலாகா அதிகாரிகள் கொடுக்க விரும்பும் மொழி அறிவை எளிதில் கொடுக்குமென்று நம்புகிறேன்.

ஆசிரியர்

136112
சென்னை-600 098.

Kabeer Printing Works, Triplicane, Madras (2209)

பொருளடக்கம்

பாடம்	விவரம்		பக்கம்
1.	பள்ளிக்கூடம் போகுதல்	...	1
2.	பந்து ஆட்டம்	...	2
3.	பெண்கள் கும்மி அடித்தல்	...	3
4.	நிறங்கள்	...	4
5.	பூனையும் அதன் குட்டிகளும்	...	5
6.	இரட்டைச் சொற்கள்	...	7
7.	என்ன செய்தான் ?	...	8
8.	சூரியன்	...	9
9.	நட, நில்	...	12
10.	சுகவழி	...	13
11.	ஆறு சுவைகள்	...	14
12.	ரோஜாப் பூ	...	17
13.	குருவிகள்	...	19
14.	கை வீசம்மா கை வீசு	...	21
15.	தாய் சொல் கேளாத கோழிக் குஞ்சு	...	23
16.	'கோழீ ! வா ! வா !'	...	25
17.	பேராசை கொண்ட நாய்	...	27
18.	ஆலமரம்	...	29
19.	மோட்டார் வண்டிகள்	...	31
20.	நல்ல பையன்	...	33
21.	கிளிப் பாட்டு	...	35

பாடம்	விவரம்	பக்கம்
22.	கிராமம்	... 37
23.	தபாற்காரன்	... 39
24.	சோம்பேறி முத்தன்	... 41
25.	பசு	... 43
26.	தெய்வம் இகழேல்	... 47
27.	பனை மரம்	... 49
28.	நீலாவும் சுசீலாவும்	... 52
29.	வீட்டைத் துப்புரவாக வைத்துக் கொள்ளுதல்	... 55
30.	எறும்புகள்	... 58
31.	இரண்டு சிறுவர்கள்	... 61
32.	மகாத்மா காந்தி	... 65
	உலக நீதி	

நெல்லைத் தமிழ் வாசகம்

இரண்டாம் வகுப்பு

பாடம் 1

பள்ளிக்கூடம் போகுதல்

இது என் பள்ளிக்கூடம்.
இதில் ஐந்து வகுப்புகள் இருக்கின்றன.
இதில் பையன்களும் பெண்களும் படிக்கிறார்கள்.
நான் இரண்டாம் வகுப்பில் படிக்கிறேன்.
நான் பள்ளிக்கூடத்திற்குப் போகிறேன்.
நான் நன்றாய்ப் பாடங்களைப் படிக்கிறேன்.

என்	வகுப்பு	நன்றாய்
பள்ளிக்கூடம்	படிக்கிறேன்	படிக்கிறார்கள்

பாடம் 2

பந்து ஆட்டம்

இந்தப் பையன்களைப் பாருங்கள்.
இவர்கள் என்ன செய்கிறார்கள் ?
இவர்கள் பந்து வைத்து ஆடுகிறார்கள்.
பையன்கள் பந்தை உதைக்கிறார்கள்.
அது துள்ளி விழுகிறது ; உருண்டு ஓடுகிறது.
பையன்கள் அங்கும் இங்கும் ஓடுகிறார்கள்.
அங்கே எத்தனை பையன்கள் நிற்கிறார்கள் ?
எண்ணு : ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு,
ஐந்து, ஆறு, ஏழு, எட்டு, ஒன்பது.
அங்கே ஒன்பது பையன்கள் நிற்கிறார்கள்.

ஆட்டம்	உதை	உருண்டு
ஆடு	துள்ளி	அங்கும் இங்கும்

பாடம் 3

பெண்கள் கும்மி அடித்தல்

இந்தப் பெண்களைப் பாருங்கள்.

இவர்கள் என்ன செய்கிறார்கள் ?

இவர்கள் கும்மி அடிக்கிறார்கள் ?

எத்தனை பெண்கள் கும்மி அடிக்கிறார்கள் ?

நான்கு பெண்கள் கும்மி அடிக்கிறார்கள்.

மத்தியில் ஒரு குத்துவிளக்கு எரிகிறது.

பெண்கள் விளக்கைச் சுற்றி வருகிறார்கள்.

பாட்டுப் பாடுகிறார்கள் ;
கும்மி அடிக்கிறார்கள்.

கும்மி அடி	மத்தியில்	சுற்றி
குத்துவிளக்கு	எரிகிறது	பாட்டுப் பாடு

பாடம் 4

நிறங்கள்

கரும்பலகை கறுப்பு நிறம்.
காக்கை கறுப்பு நிறம்.
பால் வெள்ளை நிறம்.
வெள்ளை நிறமான பொருள்கள் :
சுண்ணும்பு, வெண்ணெய், பஞ்சு.
ரத்தம் சிவப்பு நிறம்.
மிளகாய் வற்றல் சிவப்பு நிறம்.
இலை பச்சை நிறம்.
கிளி பச்சை நிறம்.
வாழைப் பழம் மஞ்சள் நிறம்.
மஞ்சள் நிறமான பூ பூவரசின் பூ.
ஆகாயம் நீல நிறம்.

நிறம்	வெள்ளை	பச்சை	நீலம்
கறுப்பு	சிவப்பு	மஞ்சள்	ஆகாயம்



பாடம் 5

பூனையும் அதன் குட்டிகளும்

பூனையையும் அதன் குட்டிகளையும் பார்.
பூனை ஒரு பாயின்மேல் இருக்கிறது.
அதன் குட்டிகள் பக்கத்தில் இருக்கின்றன.
எத்தனை பூனைக்குட்டிகள் இருக்கின்றன ?
மூன்று குட்டிகள் இருக்கின்றன.
பூனைக்குட்டிகள் என்ன செய்கின்றன ?
ஒரு பூனைக்குட்டி படுத்து இருக்கிறது.
இரண்டு பூனைக்குட்டிகள் விளையாடுகின்றன.
பூனைகள் எலிகளைப் பிடித்துத் தின்னும் ;
சோறு தின்னும் ; பால் குடிக்கும்.

பூனைக்குட்டி	சோறு	தின்னும்
பக்கத்தில்	பிடித்து	குடிக்கும்

பயிற்சி

1. சரியான வார்த்தைகளைச் சேர் :—

குதிரை	அலறும்.
கழுதை	சீறும்.
பாம்பு	அகவும்.
ஆந்தை	கனைக்கும்.
மயில்	கத்தும்.

2. காலி இடங்களில் சரியான சொற்களை அமை :—

கிணற்றில் ———— இருக்கிறது.
மீன்கள் ———— வசிக்கும்.
அவள் ———— எழுதுகிருள்.
அவன் ———— சாப்பிடுகிருன்.
தோட்டத்தில் ———— இருக்கின்றன.
இலை ———— நிறம்.

3. படித்துச் செய் :—

எழுந்து நில்.	வாயை மூடு.
உட்காரு.	கைகளைக் கட்டு.
கைகளை நீட்டு.	புத்தகத்தை எடு.
கண்களைக் காட்டு.	புத்தகத்தைத் திற.

குறிப்பு : மேற்கண்ட கட்டளைகளைக் கரும்பலகையில் எழுதிக் கொள்ளவேண்டும். ஏதாவது ஒன்றைச் சுட்டிக் காட்ட வேண்டும். அதன்படி பிள்ளைகள் செய்கிருர்களா என்று கவனிக்க வேண்டும்.



பாடம் 6

இரட்டைச் சொற்கள்

மணி ‘கண கண’ என்று அடிக்கிறது.

பூனை ‘மியா மியா’ என்று கத்துகிறது.

நாய் ‘ளொள் ளொள்’ என்று குரைக்கிறது.

ஆடு ‘மே மே’ என்று கத்துகிறது.

காகம் ‘கா கா’ என்று கரைகிறது.

கமலம் ‘கல கல’ என்று சிரிக்கிருள்.

நெருப்பு ‘கண கண’ என்று எரிகிறது.

சோறு ‘தள தள’ என்று கொதிக்கிறது.

மின்னல் ‘பளிச் பளிச்’ என்று மின்னுகிறது.

இடி ‘டம டம’ என்று இடிக்கிறது.

குரைக்கிறது	மின்னல்	மின்னுகிறது
கரைகிறது	இடி	இடிக்கிறது.

பாடம் 7

என்ன செய்தான்?

இவன் பெயர் முருகன்.
முருகன் என்ன செய்கிறான்?
முருகன் எழுதுகிறான்.
முருகன் என்ன செய்தான்?
முருகன் எழுதினான்.

எழுது—எழுதுகிறான்—எழுதினான்

இந்தப் பெண்ணைப் பார்.
இவள் பெயர் வேணி.
வேணி என்ன செய்கிறாள்?
வேணி சன்னலைத் திறக்கிறாள்.

வேணி என்ன செய்கிறாள்?
வேணி சன்னலை மூடுகிறாள்.
வேணி என்ன செய்தாள்?
வேணி சன்னலைத் திறந்தாள்.
வேணி சன்னலை மூடினாள்.

சன்னலைத் திறந்தாள்; மூடினாள்.



பாடம் 8

சூரியன்

சூரியன் காலையில் உதிக்கிறது.
அது உதிக்கும் திசை கிழக்கு.
கிழக்கே பார்த்து நில்.
அப்பொழுது உன் பின் பக்கம் மேற்கு ;
இடது கைப் பக்கம் வடக்கு.
வலது கைப் பக்கம் தெற்கு.
சூரியன் மாலையில் மேற்கே மறைகிறது.
திசைகள் நான்கு :
கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு.
சூரியன் வெளிச்சம் தரும் காலம் பகல்.
சூரியன் இல்லாத காலம் இரவு.
பகலும் இரவும் சேர்ந்தது ஒரு நாள்.
ஏழு நாட்கள் கொண்டது ஒரு வாரம்.

நாட்களைக் கிழமைகள் என்று சொல்லுகிறோம்.

கிழமைகள்

1. ஞாயிற்றுக் கிழமை	4. புதன் கிழமை
2. திங்கட் கிழமை	5. வியாழக் கிழமை
3. செவ்வாய்க் கிழமை	6. வெள்ளிக் கிழமை
7. சனிக் கிழமை	

முப்பது நாட்கள் கொண்டது ஒரு மாதம்.

தமிழ் மாதங்கள்

1.	சித்திரை	7.	ஐப்பசி
2.	வைகாசி	8.	கார்த்திகை
3.	ஆனி	9.	மார்கழி
4.	ஆடி	10.	தை
5.	ஆவணி	11.	மாசி
6.	புரட்டாசி	12.	பங்குனி

இங்கிலீஷ் மாதங்கள்

1.	ஜனவரி	7.	ஜூலை
2.	பெப்ருவரி	8.	ஆகஸ்டு
3.	மார்ச்சு	9.	செப்டம்பர்
4.	ஏப்ரல்	10.	அக்டோபர்
5.	மே	11.	நவம்பர்
6.	ஜூன்	12.	டிசம்பர்

பன்னிரண்டு மாதங்கள் ஒரு வருஷம் ஆகும்.

உதிக்கிறது	திசை	கிழக்கு
மறைகிறது	வெளிச்சம்	மேற்கு
பின்பக்கம்	வாரம்	வடக்கு
மாதம்	கிழமை	தெற்கு
வருடம்	இடது கைப்பக்கம்	வலது கைப்பக்கம்

கேள்விகள்

1. சூரியன் உதிக்கும் திசை எது ?
2. சூரியன் மறையும் திசை எது ?
3. திசைகள் எத்தனை ? சொல்.
4. இன்று என்ன கிழமை ?
5. நேற்று என்ன கிழமை ?
6. நாளை என்ன கிழமை ?
7. இது என்ன மாதம் ?

பயிற்சி

கோடிட்ட இடங்களை நிரப்பு :—

1. ஏழு நாட்கள் கொண்டது ஒரு ———.
2. முப்பது நாட்கள் கொண்டது ஒரு ———.
3. பகலும் இரவும் சேர்ந்தது ஒரு ———.
4. பன்னிரண்டு மாதங்கள் ஒரு ——— ஆகும்.

பாடம் 9

நட, நில்

நட

நான் நடக்கிறேன்.
நாங்கள் நடக்கிறோம்.
நீ நடக்கிறாய்.
நீங்கள் நடக்கிறீர்கள்.
அவன் நடக்கிறான்.
அவள் நடக்கிறாள்.
அவர்கள் நடக்கிறார்கள்.
அது நடக்கிறது.
அவை நடக்கின்றன.

நில்

நான் நிற்கிறேன்.
நாங்கள் நிற்கிறோம்.
நீ நிற்கிறாய்.
நீங்கள் நிற்கிறீர்கள்.
அவன் நிற்கிறான்.
அவள் நிற்கிறாள்.
அவர்கள் நிற்கிறார்கள்.
அது நிற்கிறது.
அவை நிற்கின்றன.

கேள்விகள்

1. நீ என்ன செய்கிறாய்? (எழுது)
2. அவன் என்ன செய்கிறான்? (படி)

பயிற்சி

'சோறு சாப்பிடு' என்பதை உபயோகித்து மேற்கண்டபடி எழுது.

பாடம் 10

சுகவழி

1. சூரியன் உதிக்குமுன் எழுந்திரு.
2. பால்போல் வெளுக்கப் பல்லைத் துலக்கு.
3. ஆலும் வேலும் பல்லுக்கு உறுதி.
4. குளிர்ந்த நீரில் குளிக்கப் பழகு.
5. கழுவா உடம்பில் ஒழியாச் சிரங்கு.
6. கந்தை ஆனாலும் கசக்கிக் கட்டு.
7. கூழ் ஆனாலும் குளித்துக் குடி.
8. பசித்துப் புசிப்பதே பரம சுகம்.
9. மிதமான உணவே உடற்கு இதம் தரும்.
10. நன்றாய் உணவை மென்றே உட்கொள்.
11. ஈ மொய்த்த உணவு எவர்க்கும் ஆகாது.
12. ஓடி ஆடுதல் உடலுக்கு உறுதி.
13. சுத்த ஆகாயம் சுகம் தரும்.
14. குளிரோடு காய்ச்சல் கொசுவால் வரும்.
15. கண்ட இடத்தில் காறி உமிழாதே.
16. நகத்தைப் பல்லால் கடிக்காதே.

துலக்கு	உறுதி	பழகு
கந்தை	கூழ்	புசி
மிதமான	இதம்	உடல்
மென்று	ஆகாயம்	சுகம்



பாடம் 11

ஆறு சுவைகள்

புளிப்பு

இது புளியம்பழம். இது புளிக்கும்.
புளிப்பான பொருள்கள் : புளி, மோர்.
எலுமிச்சம் பழத்தின் ருசி என்ன ?
எலுமிச்சம் பழத்தின் ருசி புளிப்பு.

தித்திப்பு

சர்க்கரை தித்திக்கும். பால் தித்திக்கும்.
தித்திப்பான பொருள்கள் :
வெல்லம், கற்கண்டு.

கரும்பின் ருசி என்ன? கரும்பின் ருசி தித்திப்பு.

காரம்

மிளகாய் உறைக்கும்; காரமாய் இருக்கும்.
காரமான பொருள்கள் : சுக்கு, மிளகு, இஞ்சி.
கிராம்பின் ருசி என்ன ?

கசப்பு

பாகற்காய் கசக்கும். வேப்பங்காய் கசக்கும்.
கசப்பான பொருள்கள்: வேப்பிலை, வெந்தயம்.

துவர்ப்பு

வாழைப்பூ துவர்க்கும்; வாழைக்காய் துவர்க்கும்
துவர்ப்பான பொருள்கள் : பாக்கு, கடுக்காய்.

உப்பு (உவர்ப்பு)

கடல் நீர் உப்பாயிருக்கும். அதிலிருந்து உப்பு எடுக்கிறார்கள். உப்பு கைக்கும், அதன் ருசி உவர்ப்பு.

புளிப்பு, தித்திப்பு, காரம், கசப்பு, துவர்ப்பு, உப்பு என சுவைகள் ஆறு உண்டு.

கேள்விகள்

1. ஆறு சுவைகள் எவை ?
2. பாக்கின் சுவை என்ன ?
3. புளிப்பான ஒரு பொருள் சொல்.

பயிற்சி

சரியானபடி சேர்த்துப் படி :

பால்	உறைக்கும்.
மோர்	தித்திக்கும்.
கிராம்பு	புளிக்கும்.



பயிற்சி

கோடுகள் உள்ள இடங்களில் சரியான சொற்களை அமைத்துப் படி :

கீழே, உள்ளே, பக்கத்தில், மேலே, உயரே,

மேசையின் —— ஒரு நாற்காலி இருக்கிறது.
மேசையின் —— ஒரு புத்தகம் இருக்கிறது.
மேசையின் —— ஒரு நாய் இருக்கிறது.
மேசைக்கு —— ஒரு கூண்டு இருக்கிறது.
கூண்டின் —— ஒரு கிளி இருக்கிறது.

பயிற்சி

சரியா, தப்பா?

1. மூக்கினால் வாசனை அறிகிறோம்.
2. சூரியன் மாலையில் உதிக்கிறது.
3. காகம் மே மே என்று கரைகிறது.
4. இளநீர் தித்திப்பாய் இருக்கும்.
5. பன்னிரண்டு மாதங்கள் ஒரு வருஷம்.



பாடம் 12

ரோஜாப் பூ

1. இது ஒரு ரோஜாப் பூ. இது மிகவும் அழகான மலர். இது வெண்மை கலந்த சிவப்பு நிறமானது; மிகவும் வாசனை உள்ளது.

2. ரோஜாப் பூவில் பல இதழ்கள் இருக்கின்றன. பூவின் காம்பு குட்டையானது. சில ரோஜாப் பூக்கள் மிகச் சிறியனவாக இருக்கும். பூ விரிவதற்கு முன் அதை மொட்டு அல்லது அரும்பு என்பார்கள்.

3. பூக்களைத் தலையில் சூடிக் கொள்ளலாம். பூக்களால் மாலை கட்டலாம்; பூசை செய்யலாம். ரோஜாப் பூக்களால் கட்டப்பட்ட மாலைகள் மிகவும் அழகாய் இருக்கும். ரோஜாப்

பூவிலிருந்து பனிநீர் வடிக்கிறுர்கள்; அத்தரும் இறக்குகிறுர்கள்.

4. ரோஜாச் செடிகளைத் தோட்டங்களில் வளர்ப்பார்கள். சிலர் அச் செடிகளைத் தொட்டிகளில் வளர்ப்பதும் உண்டு. அது குத்துச் செடியாக வளரும். ரோஜாச் செடியின் குச்சிகளை நட்டு அச் செடியைப் பயிர் செய்யலாம்.

கலந்த	வாசனை	இதழ்கள்
குட்டை	மொட்டு	அரும்பு
சூடிக்கொள்	மாலை	பூசை
பனி நீர்	குத்துச் செடி	நட்டு

கேள்விகள்

1. ரோஜாப் பூவின் நிறம் என்ன?
2. அரும்பு என்றுல் என்ன?
3. ரோஜாப் பூக்களின் உபயோகம் என்ன?
4. ரோஜாச் செடியை எவ்விதம் பயிர் செய்யலாம்?

பயிற்சி

கோடிட்ட இடங்களை நிரப்பு:

1. ரோஜாப் பூவில் —— இதழ்கள் ——.
2. ரோஜாப் பூவின் காம்பு ——.



பாடம் 13

குருவிகள்

1. இந்தக் குருவிகளைப் பார். இவை சிட்டுக் குருவிகள். இவை 'சிட் சிட்' என்று சத்தம் இடும். ஆகையால் இவைகளுக்குச் சிட்டுக் குருவி என்ற பெயர் ஏற்பட்டது எனலாம்.

2. சிட்டுக் குருவிகள் வீட்டுக் கூரைகளிலும், கிணற்றுப் பொந்துகளிலும், மரப் பொந்துகளிலும் கூடு கட்டும். இவை புல், வைக்கோல், பஞ்சு, நூல், இறகு முதலிய பொருள்களால் கூட்டை அமைக்கும். பெண் குருவி, முட்டை இடும் காலத்தில் ஐந்து அல்லது ஆறு முட்டைகளை இடும்.

3. சிட்டுக் குருவிகள் ஆகாயத்தில் நன்ருகப் பறக்கும். இவற்றின் கால்கள் குட்டையானவை. இவை குதித்துக் குதித்து நடக்கும்.

4. சிட்டுக் குருவிகள் நெல் முதலிய தானியங்களையும், புழுக்களையும், பூச்சிகளையும் தின்னும். இவை புழுக்களைப் பொறுக்கி வந்து தம் குஞ்சுகளுக்கு வாயில் ஊட்டும். சிட்டுக் குருவிகளின் அலகு குட்டையாயும் குவிந்தும் இருப்பதைக் கவனியுங்கள்.

பொந்து	வைக்கோல்	குட்டை
பொறுக்கி	குஞ்சு	தானியம்
அலகு	குவிந்து	ஊட்டு

கேள்விகள்

1. சிட்டுக் குருவி என்ற பெயர் குருவிக்கு ஏன் ஏற்பட்டது?
2. சிட்டுக் குருவி எங்கெங்கே கூடு கட்டும்?
3. என்னென்ன பொருள்களால் கூடு கட்டும்?
4. சிட்டுக் குருவியின் உணவு என்ன?

பயிற்சி

கீழ்க்கண்டவைகளை வாக்கியங்களில் உபயோகித்து எழுது:—

குட்டையாய்	நன்றாக	பொறுக்கி
பார்	குதித்துக் குதித்து	



பாடம் 14

கை வீசம்மா கை வீசு

1. கை வீசம்மா கை வீசு
   கடைக்குப் போகலாம் கை வீசு
2. பழங்கள் வாங்கலாம் கை வீசு
   பாங்காய்த் தின்னலாம் கை வீசு
3. மிட்டாய் வாங்கலாம் கை வீசு
   புட்டுத் தின்னலாம் கை வீசு
4. பொம்மை வாங்கலாம் கை வீசு
   சொகுசாய் ஆடலாம் கை வீசு
5. சட்டை வாங்கலாம் கை வீசு
   போட்டுக் கொள்ளலாம் கை வீசு
6. பூக்கள் வாங்கலாம் கைவீசு
   சூடிக் கொள்ளலாம் கை வீசு.


1
2
3

பாடம் 15

தாய் சொல் கேளாத கோழிக் குஞ்சு

படம் 1: ஒரு பெட்டைக் கோழியும் அதன் குஞ்சுகளும் இரை தேடுகின்றன. நான்கு குஞ்சுகள் பெட்டைக் கோழியின் பக்கத்தில் நின்று இரை தேடுகின்றன. ஒரு பெரிய குஞ்சு தூரத்தில் நின்று இரை தேடுகிறது.

படம் 2: பெட்டைக் கோழி பெரிய குஞ்சைக் கூப்பிடுகிறது. "தனியாக அங்கே போகாதே. அங்கு நரி வரும்; உன்னைக் கௌவிக்கொண்டு ஓடும். இங்கு வா" என்று சொல்லுகிறது. பெரிய குஞ்சு தாயின் சொல் கேட்கவில்லை.

படம் 3: நரி பெரிய கோழிக் குஞ்சைக் கௌவிக் கொண்டு ஓடுகிறது. பெட்டைக் கோழியும் மற்றக் குஞ்சுகளும் பயந்து ஓடுகின்றன.

கேள்விகள்

1. பெட்டைக் கோழியும் குஞ்சுகளும் என்ன செய்கின்றன ?
2. பெரிய கோழிக் குஞ்சு எங்கிருந்து இரை தேடுகிறது ?

3. பெட்டைக் கோழி பெரிய குஞ்சைப் பார்த்து என்ன சொல்லுகிறது?

4. பெரிய குஞ்சு தாயின் சொல் கேட்கிறதா?

5. நரி என்ன செய்கிறது?

கதை

ஒரு நாள் பெட்டைக் கோழியும் அதன் குஞ்சுகளும் இரை தேடிக் கொண்டு இருந்தன. பெட்டைக் கோழியின் பெரிய குஞ்சு தூரத்தில் போய் இரை தேடினது. பெட்டைக் கோழி அதைத் தன் பக்கத்தில் வரும்படி கூப்பிட்டது. அக்குஞ்சு தாயின் சொல்லைக் கேட்கவில்லை. அங்கு ஒரு நரி வந்தது. அது அப்பெரிய குஞ்சைக் கௌவிக்கொண்டு ஓடியது. பெட்டைக் கோழியும் மற்றக் குஞ்சுகளும் ஓடி உயிர் தப்பின.

‘ தாய் சொல் கேள் ’

இரை தேடுகிறது	இரை தேடினது
கூப்பிடுகிறது	கூப்பிட்டது
ஓடுகிறது	ஓடியது

பாடம் 16

"கோழீ! வா வா!"

சேவற் கோழி

1. கோழீ! கோழீ! வா வா
 கொக்கோ கோ என்றுவா
 கோழீ! ஓடி வாவா
 கொண்டைப் பூவைக் காட்டுவா.

2. காலை கூவி எங்களைக்
 கட்டில் விட் டெழுப்புவாய்
 வேலை செய்ய ஏவுவாய்
 வெற்றி கொண்ட கோழியே.

பெட்டைக் கோழி

3. கோழீ! கோழீ! வா வா
 கூரை விட் டிறங்கிவா
 கோழீ! முட்டை இட வா
 கூட்டில் அடை காக்கவா.

4. பெட்டைக் கோழி வாவா
 பிள்ளை களைக் கூட்டிவா
 குட்டை நெல்லைக் கொட்டினேன்
 கொத்திக் கொத்தித் தின்னவா.

சி. தேசிகவிநாயகம் பிள்ளை

T3
031/20
N53
136112


1
2
3
4

பாடம் 17

பேராசை கொண்ட நாய்

படம் 1 : ஒரு நாய் ரஸ்தாவின் வழியாகப் போகிறது. அதன் வாயில் ஒரு ரொட்டி இருக்கிறது.

படம் 2 : வழியில் ஒரு நீரோடை குறுக்கிட்டுச் செல்கிறது. அதைத் தாண்டிச் செல்ல அதன் மீது ஒரு சிறிய பாலம் இருக்கிறது. நாய் அந்தப் பாலத்தின் மீது போகிறது. அது தன் நிழலைத் தண்ணீரில் பார்க்கிறது.

படம் 3 : தண்ணீரில் வேருெரு நாய் மற்ருெரு ரொட்டியைக் கௌவிக் கொண்டு இருப்பதாக அது நினைக்கிறது. அந்த ரொட்டியைப் பிடுங்கிக்கொள்ள ஆசைப்படுகிறது. அது ' ளொள், ளொள் ' என்று குரைக்கிறது. உடனே ரொட்டி தண்ணீரில் விழுகிறது. ரொட்டியை எடுக்க நாய் தண்ணீரில் குதிக்கிறது.

படம் 4 : ரொட்டி தண்ணீரோடு போய் விடுகிறது. ஆகையால் நாய் வருத்தத்துடன் கரை ஏறுகிறது.

ரஸ்தா	நீரோடை	குறுக்கிட்டு
செல்கிறது	நிழல்	கௌவிக்கொண்டு
உடனே	வருத்தத்துடன்	கரை

கேள்விகள்

1. நாய் எதைக் கௌவிக்கொண்டு போனது?

2. பாலம் எங்கே இருந்தது?

3. நாய் பாலத்தின் மீது போகும்போது எதைப் பார்த்தது? அப்போது அது என்ன நினைத்தது?

4. ரொட்டி தண்ணீரில் ஏன் விழுந்தது?

5. ரொட்டி தண்ணீரில் விழுந்ததும் நாய் என்ன செய்தது?

6. நாய் ஏன் வருத்தப்பட்டது?

7. இந்தக் கதையிலிருந்து நீ அறிவது என்ன?

பயிற்சி

கோடிட்ட இடங்களைச் சரியான சொற்களால் நிரப்பு :—

1. நான் நேற்றுப் பள்ளிக்கூடத்திற்குப் ——.
(போவேன், போனேன், போகிறேன்)

2. நேற்று கோபாலன் கீழே ———.
(விழுகிறான், விழுவான், விழுந்தான்)

3. நாளை என் தகப்பனார் ———.
(வருவார், வந்தார், வருகிறார்)

கற்றுக்கொள்

இருக்கிறது	—	இருந்தது
செல்கிறது	—	சென்றது
பார்க்கிறது	—	பார்த்தது
நினைக்கிறது	—	நினைத்தது
ஆசைப்படுகிறது	—	ஆசைப்பட்டது
குரைக்கிறது	—	குரைத்தது
குதிக்கிறது	—	குதித்தது
ஏறுகிறது	—	ஏறினது

பாடம் 18

ஆலமரம்

1. ஆலமரங்கள் சாதாரணமாக எங்கும் காணப்படும். சாலைகளின் ஓரங்களில் நிழலுக்காக ஆலமரங்களை வளர்க்கிருர்கள்.

2. ஆலமரம் பரந்து வளரும். இதன் அடிமரம் பருத்து இருக்கும். இதற்குக் கிளைகள் உண்டு. கிளைகளிலிருந்து விழுதுகள் தொங்கும். ஆலமரத்தில் இலைகள் அடர்ந்து இருக்கும். ஆல் இலை பச்சை நிறம் ஆனது.

3. ஆலம் பழங்கள் சிவப்பாகவும் உருண்டையாகவும் இருக்கும். அவற்றினுள் சிறு சிறு விதைகள் காணப்படும். சில பறவைகள் ஆலம் பழங்களைத் தின்னும்.

4. ஆலமரத்தின் நிழலில் பலர் தங்கலாம். ஆல் இலைகளைத் தைத்து உண்கலமாக உபயோகிக்கலாம். விழுதுகள் பல் துலக்க உதவும்.

சாதாரணமாக	ஓரம்	நிழல்
பரந்து	பருத்து	விழுது
உண்கலம்	உருண்டை	அடர்ந்து

கேள்விகள்

1. சாலை ஓரங்களில் ஆலமரங்களை ஏன் வளர்க்கிறார்கள்?
2. ஆலம்பழம் எவ்விதம் இருக்கும்?
3. ஆலமரம் எவ்விதங்களில் உபயோகப்படுகிறது?

பயிற்சி

கோடிட்ட இடத்தில் பொருத்தமான வார்த்தையை எழுது :—

1. ஆலமரம் ——— வளரும் (பரந்து, பறந்து)
2. காகம் ——— செல்லும் (பறந்து, பரந்து)
3. ஆலமரத்தின் ——— பலர் தங்கலாம் (உச்சியில், நிழலில்)

பாடம் 19

மோட்டார் வண்டிகள்

1. இக்காலத்தில் மோட்டார் வண்டிகள் சாதாரணமாக எங்கும் காணப்படுகின்றன. மோட்டார்களைப் பிளஷர் கார், மோட்டார் பஸ், மோட்டார் லாரி என மூன்று வகைகளாகப் பிரிக்கலாம். மோட்டார் வண்டிகள் வேகமாக ஓடும்.



2. இது ஒரு பிளஷர் கார். இது 'பெட்ரோல்' என்ற எண்ணெயின் உதவியால் ஓடுகிறது. இது மிகவும் விலை உயர்ந்தது.

3. இக்காலத்தில் பிரயாணம் செய்வதற்குப் பஸ்கள் மிகவும் உபயோகப்படுகின்றன. ஒரு மோட்டார் பஸ்ஸில் சாதாரணமாக இருபது, முப்பது மனிதர்கள் இருக்கலாம். பஸ்ஸில் 'கண்டக்டர்' என்ற ஒருவர் இருப்பார். அவர் பிரயாணிகளிடம் பயணக்

கூலியை வசூலிப்பார். 'டிரைவர்' பஸ்ஸை ஓட்டிச் செல்லுவார்.



4. இது ஒரு மோட்டார் லாரி. ஓர் இடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குச் சாமான்களை எடுத்துச்செல்ல மோட்டார் லாரி உதவுகிறது.

சாதாரணமாக	வகை	வேகமாக
உதவி	பஸ்	பிரயாணம்
பிரயாணி	வசூலிப்பவர்	மற்றோர்

கேள்விகள்

1. மோட்டார் வண்டி ஓட என்ன எண்ணெய் வேண்டும்?
2. பஸ்ஸில் சுமார் எத்தனை பேர் பிரயாணஞ் செய்யலாம்?
3. மோட்டார் லாரியின் உபயோகம் என்ன?

பயிற்சி

கோடு போட்டுள்ள இடங்களில் சரியான சொற்களை அமை :—

பஸ்ஸை, மெதுவாக, பயணக்கூலியை, வேகமாக.

1. மோட்டார் வண்டி —— ஓடும்.
2. மாட்டு வண்டி —— ஓடும்.
3. கண்டக்டர் —— வசூலிப்பார்.
4. டிரைவர் —— ஓட்டிச் செல்வார்.

பாடம் 20

நல்ல பையன்

1. இந்தப் பையனுடைய பெயர் பொன்னுசாமி. இவனுடைய தகப்பனாரின் பெயர் முருகேச பிள்ளை, அவர் ஒரு மிராசுதார். பொன்னுசாமியின் தாயார் பெயர் தங்கம்மாள். பொன்னுசாமிக்கு ஓர் அண்ணன் இருக்கிறான். ஓர் அக்காள் இருக்கிறாள். தம்பி இல்லை. தங்கை இல்லை.

2. பொன்னுசாமிக்கு ஏழு வயது ஆகிறது. அவன் வசிக்கும் ஊர் வேலன்பட்டி. அந்த ஊரில் ஒரு சர்க்கார் பள்ளிக்கூடம் இருக்கிறது. பொன்னுசாமி அந்தப் பள்ளிக்கூடத்தில் இரண்டாவது வகுப்பில் படிக்கிறான்.

3. பொன்னுசாமி தினந்தோறும் அதிகாலையில் எழுந்திருப்பான். பல்லை விளக்கி ஸ்நானம் செய்வான். சுத்தமான உடைகளை உடுத்திக் கொள்வான். பிறகு தன் பாடங்களைக் கவனமாகப் படிப்பான்.

4. பொன்னுசாமி காலம் தவருமல் பள்ளிக்கூடத்திற்குப் போவான். உபாத்தியாயர் கற்பிக்கும் பாடங்களை நன்ருகக் கவனிப்பான்.

5. பொன்னுசாமி பொய் சொல்லமாட்டான். கெட்ட பிள்ளைகளுடன் சேரமாட்டான். அவன் பிள்ளைகளுடன் சண்டையிடுவது இல்லை. ஊரார் எல்லோரும் பொன்னுசாமியை 'நல்ல பையன்' என்று சொல்லுவார்கள்.

மிராசுதார்	சர்க்கார்	தினந்தோறும்
அதிகாலை	சுத்தமான	உடை
கவனமாக	காலம்	தவருமல்
கற்பிக்கும்	கவனி	ஊரார்

கேள்விகள்

1. பொன்னுசாமிக்கு எத்தனை வயது ?
2. பொன்னுசாமி எவ்விதமான பையன் ?

பயிற்சி

கேள்விகளுக்குப் பதில் சொல்லு. பதில் எழுது :

1. உன் தகப்பனுரின் பெயர் என்ன ?
2. உன் தகப்பனுரின் வேலை என்ன ?
3. உனக்கு எத்தனை அண்ணன், அக்காள், தங்கை, தம்பி இருக்கிருர்கள் ?

பாடம் 21

கிளிப் பாட்டு

1. பச்சைக் கிளியே வாவா !
   பாலுஞ்சோறும் உண்ணவா !
   கொச்சிமஞ்சள் பூசவா !
   கொஞ்சிவிளை யாடவா !

2. பையப்பையப் பறந்துவா !
   பாடிப்பாடிக் களித்துவா !
   கையில்வந் திருக்கவா !
   கனியருந்த ஓடிவா !

3. வட்டமாயுன் கழுத்திலே
   வானவில்லை ஆரமாய்
   இட்டமன்னர் யாரம்மா
   யானறியக் கூறம்மா !

4. கவலையெல்லாம் நீங்கவே
   களிப்பெழுந்து பொங்கவே
   பவழவாய் திறந்து நீ
   பாடுவாயோ தத்தம்மா

சி. தேசிகவிநாயகம் பிள்ளை



கிராமம்

பாடம் 22
கிராமம்

1. வேலன்பட்டி ஓர் அழகான கிராமம். கிராமத்திற்கு அருகே வயல்களும், தோட்டங் களும், தோப்புகளும் இருக்கின்றன. ஆடு மாடுகள் மேய்வதற்கு வசதியான பசும்புல் தரைகளும் உண்டு.

2. இந்தக் கிராமத்தில் இரண்டு குளங் களும், ஒரு வாய்க்காலும் உண்டு. ஊரிலிருந்து ஒரு மைல் தூரத்திற்குள் நதி ஒன்று ஓடுகிறது. ஆகையால் இவ்விடத்தில் தண்ணீர் வசதிக்குக் குறைவு இல்லை.

3. இவ்வூரில் ஒரு பள்ளிக்கூடம் இருக் கிறது. இப்பள்ளிக் கூடத்தில் அநேக சிறுவர்களும் சிறுமிகளும் படித்து வருகிறார் கள்.

4. வேலன் பட்டியில் உள்ளவர்களில் பலர் குடியானவர் கள். அவர்கள் உழுது பயிரிட்டு ஜீவனம் செய்கிறார்கள்.

5. இவ்வூரில் சில தொழிலாளிகள் இருக் கிறார்கள். சிலர் தறிகளில் துணிகளை நெய்கி

ருர்கள். சிலர் மரத்திஞல் பல சாமான்களைச் செய்கிருர்கள். சிலர் இரும்பால் அரிவாள், மண்வெட்டி, கோடரி முதலிய ஆயுதங்கள்

செய்கிருர்கள். சிலர் மண்ணுல் பாண்டம் வனை கிருர்கள். சிலர் நாம் குடியிருக்கும் வீடு கட்டிக் கொடுக்கிருர்கள். சிலர் உடைகளைத் தைத்துக் கொடுக்கிருர்கள். இத் தொழிலாளிகள் கிராமத்திற்கு மிக அவசியம். இவர்களைப்போல் நீங்களும் ஏதாவது தொழில் கற்றுக்கொள்ள வேண்டும்.

அருகே	வசதியான	குறைவு
சிறுவர்	சிறுமிகள்	குடியானவன்
ஜீவனம்	தொழிலாளி	தறி
ஆயுதங்கள்	பாண்டம்	அவசியம்

கேள்விகள்

1. வேலன்பட்டி கிராமம் அழகாகக் காணப்படுவது ஏன் ?
2. அங்குத் தண்ணீர் வசதிக்கு ஏன் குறைவு இல்லை ?
3. அக்கிராமத்திலுள்ள தொழிலாளிகள் யார் ?

பயிற்சி

அருகே, வசதியான, அழகான, அநேக, ஒற்றுமையாக—ஒவ்வொரு வார்த்தையையும் தனித் தனி வாக்கியத்தில் அமைத்து எழுது.

பாடம் 23

தபாற்காரன்

1. இந்தப் படத்தைப் பார். ஒரு தபாற்காரன் ஒருவருக்குக் கடிதம் கொடுத்துக் கொண்டு இருக்கிறான். அவனுடைய தோளில் ஒரு பை தொங்கிக் கொண்டு இருக்கிறது. அவன் தன் இடது கையில் சில கடிதங்களை

வைத்திருக்கிறான். அவனுடைய பையிலும் கடிதங்கள் இருக்கின்றன. அவன் தபாலாபீசிலிருந்து கடிதங்களைக் கொண்டு வருகிறான்.

2. ஒவ்வொரு கடிதத்திலும் மேல் விலாசம் எழுதி இருக்கும். இந்தப் படத்தில் காட்டி

ஸ்ரீ சுப்பிரமணிய பிள்ளை,
புத்தக வியாபாரம்,
திருநெல்வேலி.

யிருப்பது ஒரு கடிதத்தின் மேல் விலாசம். தபாற்காரன் விலாசங்களைப் பார்த்து, அவற்றில் குறிப்பிட்டவர்களுக்குக் கடிதங்களைக் கொடுத்துக் கொண்டு போவான்.

3. நாம் அயல் ஊர்களில் இருப்பவர்களுக்குக் கடிதங்கள் எழுதுகிறோம். இக்கடிதங்களைத் தபாற் பெட்டியில் போடுகிறோம். தபாற்காரன் அல்லது தபாற் சேவகன் தபாற் பெட்டிகளிலிருந்து கடிதங்களை எடுப்பான். அவைகளைத் தபாலாபீசுக்குக் கொண்டு போவான். அங்குள்ள உத்தியோகஸ்தர்கள் கடிதங்களை விலாசங்களில் கண்ட ஊர்களுக்கு அனுப்புவார்கள்.

தோள்	தபாலாபீசு	மேல் விலாசம்
குறிப்பிட்ட	அயல் ஊர்	தபாற்பெட்டி
சேவகன்	உத்தியோகஸ்தர்	தபாற்காரன்

கேள்விகள்

1. தபாற்காரனது வேலை என்ன ?
2. கார்டின் விலை என்ன ? கவரின் விலை என்ன ?
3. உன் தகப்பனாரின் விலாசம் என்ன ?
4. நாம் கடிதங்களை எழுதி எங்கே போடுகிறோம்?

பயிற்சி

மௌனமாகப் படி. பிறகு அந்தச் சமாசாரத்தைக் கோவிந்தன் தன் தாயாரிடம் சொல்வதுபோல் நீ சொல்லு.

கோவிந்தனிடம் அவனுடைய தகப்பனார் முக்காலணா கொடுத்தார். தபாலாபீசுக்குப் போய் ஒரு கார்டு வாங்கிக்கொண்டு வரச்சொன்னார். அவன் தபாலாபீசுக்குப் போகிற வழியில் அவனுடைய சிநேகிதனைச் சந்தித்தான். இருவரும் தபாலாபீசுக்குப் போனார்கள். கார்டு வாங்கிக்கொண்டு திரும்பினார்கள். கோவிந்தன் கார்டைத் தன் தகப்பனாரிடம் கொடுத்தான்.

பாடம் 24

சோம்பேறி முத்தன்

1. முத்தன் ஒரு சோம்பேறி. அவன் வேலை செய்வதே இல்லை. அவன் பிச்சை எடுத்து வயிறு வளர்த்து வந்தான்.

2. ஒரு நாள் முத்தனுக்கு எங்கும் பிச்சை கிடைக்கவில்லை. அவன் வருத்தத்துடன் ஒரு தோட்டத்திற்குப் போனான். அங்கே அவன் ஒரு காக்கையைக் கண்டான். அது சிறு சுள்ளிகளைப் பொறுக்கிக் கொண்டு இருந்தது. ‘காக்கை சோம்பேறியாக இருக்கவில்லை. கூடு கட்டப் போகிறது’ என்று அவன் தெரிந்து கொண்டான்.

3. முத்தன் தோட்டத்தைச் சுற்றி வந்தான். அங்கே ஒரு பக்கத்தில் சில தேனீக்களைக் கண்டான். அவை மலர்

தோறும் பறந்து கொண்டு இருந்தன. 'தேனீக்கள் சுறு சுறுப்பாகத்தேன் எடுக்கின்றன' என்று அவன் அறிந்து கொண்டான்.

4. முத்தனுக்குப் புத்தி வந்தது. இனி நான் சோம்பேறியாக இருக்கமாட்டேன்; சுறு சுறுப்பாக இருப்பேன்; பிச்சை எடுக்க மாட்டேன்; உழைத்துப் பொருள் சம்பாதிப்பேன்' என்று அவன் தீர்மானித்தான். பிறகு அவன் ஒரு கடையில் வேலைக்கு அமர்ந்தான்.

சோம்பேறி	வயிறு வளர்த்து	வருத்தத்துடன்
சுற்றி	சுள்ளி	சுறு சுறுப்பாக
அறிந்து	மலர் தோறும்	உழைத்து
பொருள்	சம்பாதி	தீர்மானி

கேள்விகள்

1. முத்தன் எவ்விதம் வயிறு வளர்த்து வந்தான்?
2. தோட்டத்தில் காக்கை என்ன செய்துகொண்டிருந்தது?
3. தேனீக்கள் என்ன செய்து கொண்டிருந்தன?
4. முத்தன் என்ன தீர்மானித்தான்?

பயிற்சி

கோடிட்ட இடங்களை நிரப்பு :—

1. முத்தன் ஒரு————.
2. அவன் பிச்சை எடுத்து————வந்தான்.
3. ஒரு நாள் அவனுக்குப்————கிடைக்கவில்லை.
4. அவன்————ஒரு தோட்டத்திற்குள்————.



பாடம் 25

பசு

1. நாம் வீடுகளில் பசுமாடு, காளைமாடு, எருமைமாடு, குதிரை, நாய் முதலிய மிருகங்களை வளர்க்கிறோம். இவற்றுள் பசு சாதுவான மிருகம். நாம் அதைப் பாலுக்காக வளர்க்கிறோம்.

2. பசுவின் பால் குழந்தைகளுக்குச் சிறந்த உணவாகும். தவிர, அது யாவர்க்கும் உடல் நலத்தைக் கொடுக்கும்.

3. பசுவுக்கு இரண்டு கொம்புகள் உண்டு. யாராவது அதை அடிக்கப்போனால், அது கொம்புகளால் முட்டும்.

4. பசுவின் வால் நீளமானது. நுனியில் மயிர்க்குஞ்சம் இருக்கிறது. அது தன்மேல் உட்காரும் ஈ, கொசு முதலியவைகளை வாலால் துரத்தும்.

5. பசு புல்லை மேயும். குனிந்து புல்லை மேயும்படி கழுத்து நீளமாயிருக்கிறது. பசு வைக்கோல், புல், தவிடு, பிண்ணாக்கு, பருத்திக் கொட்டை முதலியவைகளைத் தின்னும். பால் கொடுக்கும் பசுக்களுக்குச் சிலர் பருத்திக் கொட்டையை அரைத்துத் தவிட்டுடன் கலந்து தீனியாக வைப்பார்கள். பசு தண்ணீரையும், கழுநீரையும் குடிக்கும்.

6. பசுவின் பாலைக் காய்ச்சி ஆறவைத்து அதில் சிறிது மோரை ஊற்றுவார்கள். அது தயிராகும். தயிரைக் கடைந்தால் மோரும் வெண்ணெயும் கிடைக்கும். வெண்ணெயை உருக்கினால் நெய் ஆகும்.

7. பசு கன்று போடும். ஆண் கன்றைச் சேங்கன்று என்றும், பெண் கன்றைக் கிடாரி என்றும் சொல்லுகிறோம். சேங்கன்றுகள் வளர்ந்ததும் வயலை உழவும், வண்டிகளை இழுக்கவும் உதவும்.

8. பசுமாட்டைக் கட்டும் தொழுவத்தைச் சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும்.

கறவைப் பசுமாட்டுக்குச் சரியான வேளைகளில் சரியான அளவுப்படி தீனிபோட்டு அதை வளர்க்க வேண்டும். அவ்விதம் வளர்த்தால் அது .மிகுந்த பால் கொடுக்கும். கன்றுக்குப் போதுமான அளவு பால் விட்டுவிட வேண்டும். கன்றுக்குப் போதுமான அளவு பால் விடா விட்டால் அது இளைத்துப் போகும்.

சாதுவான	சிறந்த	யாவர்க்கும்
உடல்நலம்	நுனி	குஞ்சம்
துரத்தும்	குனிந்து	தீனி
கடைந்தால்	உருக்கினால்	சேங்கன்று
கிடாரி	கறவைப் பசு	வளர்க்க

கேள்விகள்

1. பசுவின் கழுத்து எவ்விதம் இருக்கிறது? அவ்விதம் இருப்பதால் என்ன நன்மை?
2. பசுவின் உணவு என்ன?
3. வெண்ணெய் எவ்விதம் கிடைக்கிறது?

பயிற்சி

கோடிட்ட இடங்களை நிரப்பு :—

1. பசுவின் பால் ——.
2. வாலின் —— மயிர்க்குஞ்சம் ——.
3. ஆண் கன்றைச் —— என்பர்.


1
2
3
4

பாடம் 26

தெய்வம் இகழேல்

1. ஒரு மனிதன் ஒரு சாலை வழியாக நடந்து போய்க்கொண்டு இருந்தான். மத்தியானம் ஆயிற்று. வெயில் அதிகமாக இருந்தது. அவன் இளைப்பாற எண்ணினான்.

2. அவன் வழியிலிருந்த ஓர் ஆலமரத்தினடியில் உட்கார்ந்தான். மரத்தின் கிளையிலிருந்த ஒரு பறவை 'கீச், கீச்' என்று கத்தியது. உடனே வழிப்போக்கன் அண்ணாந்து பார்த்தான். அப்பறவை ஓர் ஆலம் பழத்தைத் தின்று கொண்டிருப்பதைக் கண்டான். உடனே அவன், "ஆ! கடவுள் எல்லாவற்றையும் படைத்தவர்; அவர் எல்லாம் அறிந்தவர் என்று சொல்லுகிறார்களே! இவ்வளவு பெரிய மரத்திற்கு இவ்வளவு சிறிய பழங்கள் தானா? இவை ஒன்றுக் கொன்று பொருத்தமாக இல்லையே. கடவுளை எல்லாம் அறிந்தவர் என்று சொல்லுவது பொருந்தாது" என்று சொல்லிக் கடவுளை இகழ்ந்தான்.

3. பிறகு அவன் மரத்தடியில் படுத்துத் தூங்கினான். அப்பொழுது ஓர் ஆலம் பழம் மரத்திலிருந்து அவன் கண் இமை மேல் விழுந்தது.

4. உடனே அவன் திடுக்கிட்டு எழுந்தான். அந்தப் பழத்தைப் பார்த்தான். "ஆ! இந்தப் பழம் மிகப் பெரியதாக இருந்திருந்தால் இப்பொழுது என் கதி என்னுகும்? கடவுளை நான் இகழ்ந்தது தவறு" என்று நினைத்தான்; கடவுளை வணங்கினுன்.

சாலை	மத்தியானம்	இளைப்பாற
அண்ணுந்து	வழிப்போக்கன்	படைத்தவர்
பொருத்தமாக	இகழ்ந்தான்	கண் இமை
திடுக்கிட்டு	கதி	தவறு

கேள்விகள்

1. வழிப்போக்கன் ஆலம்பழங்களைப் பார்த்ததும் என்ன நினைத்தான்?
2. அவன் கடவுளை இகழ்ந்தது தவறு என்பதை எவ்விதம் அறிந்தான்?
3. இக்கதையிலிருந்து நீ அறிவது என்ன?

பயிற்சி

'உண்டு' அல்லது 'இல்லை' என்னும் வார்த்தையால் பதிலைக் குறிப்பிடுக :—

1. குதிரைக்குக் கொம்புகள் உண்டா?
2. ஆலமரத்திற்குக் கிளைகள் உண்டா?
3. உன் ஊரில் தபாலாபீசு உண்டா?
4. நீ மதுரைக்குப் போனது உண்டா?
5. நீ கடவுளை வணங்குவது உண்டா?



பாடம் 27

பனை மரம்

1. பனை மரம் அதிக உயரமாய் வளரும். இதன் மேற்புறம் சொர சொரப்பாய் இருக்கும். இதற்குக் கிளைகள் இல்லை; ஆனால் இதன் உச்சியில் மட்டைகள் இருக்கும். மட்டைகளிலுள்ள ஓலைகளின்மீது காற்று மோதும்போது சல சல என்ற ஓசை எழும்.

2. பனை மட்டைகளின் இருபுறங்களிலும் கருக்குகள் உண்டு; கருக்குகள் கூர்மையாக இருக்கும். பனைமட்டைகள் அடுப்பு எரிக்க உதவும். மட்டைகளிலிருந்து நார் உரிக்கலாம். அந்த நாரினால் கயிறு திரிக்கலாம்.

3. பனை ஓலை கூரை வேய உதவும், விசிறிகளும், பாய்களும், பெட்டிகளும் செய்யலாம். பனை ஓலைகளை ஏடுகளாகச் சேர்த்து எழுதவும் உபயோகிக்கிறார்கள்.

4. மட்டைகளின் இடையே பாளைகள் இருக்கின்றன. பனை மரம் குலை குலையாகக் காய்க்கும். பனை இளங்காய்க்கு நுங்கு என்று பெயர். அதனுள் இருக்கும் கொட்டையையும் நுங்கு என்பார்கள். அதைத் தின்னலாம்; அது ருசியாக இருக்கும். நுங்கு முற்றினால் பழம் ஆகும். பனம்பழத்தைச் சிலர் தின்பது உண்டு. பனம்பழத்தில் கொட்டை இருக்கும். அதை மண்ணில் புதைத்து வைத்தால் அதிலிருந்து கிழங்கு உண்டாகும். பனங் கிழங்கைச் சுட்டும் வேகவைத்தும் தின்பர்.

5. பனையிலிருந்து பதநீர் இறக்குகிறார் கள். பதநீரைக் கொண்டு வெல்லமும் கற் கண்டும் செய்யலாம்.

6. பனை மரம் மணற்பாங்கான பிரதேசங் களில் நன்றாய் வளரும். பனம் பழத்திலுள்ள கொட்டையை மண்ணில் புதைத்துத் தண்ணீர் ஊற்றி வந்தால் அது கிழங்காகும். கிழங்கி லுள்ள குருத்து வளரும். இளம் பனையை வடலி என்பர். பனைமரத்திற்கு அதிகத் தண்ணீர் வேண்டியதில்லை.

சொர சொரப்பாய்	கிளைகள்	உச்சி
மோதும்	ஓசை	எழும்
கருக்கு	கூர்மையாக	எரிக்க
நார்	உரி	திரி
கூரை வேய	பாளை	குலை
நுங்கு	இடையே	பதநீர்
மணற்பாங்கான	பிரதேசம்	குருத்து
வடலி	கற்கண்டு	ஏடு

கேள்விகள்

1. பனையோலை எவ்விதத்தில் உபயோகப்படுகிறது ?
2. நுங்கு என்றால் என்ன ?
3. பனைமரத்தை வளர்க்க என்ன செய்ய வேண்டும் ?
4. பதநீரைக் கொண்டு என்னென்ன பொருள்கள் செய்யலாம் ?

பயிற்சி

கோடிட்ட இடங்களை நிரப்பு :—

1. பனை நாரினால் —— திரிக்கலாம்.
2. பனை மட்டையின் இருபுறங்களிலும் —— இருக்கும்.
3. இளம்பனையை —— என்பர்.
4. பனையோலை —— உதவும்.
5. பனைமரத்திற்குக் கிளைகள் ——.



பாடம் 28

நீலாவும் சுசீலாவும்

[நீலாவும் சுசீலாவும் ஒரே வகுப்பில் படிக்கும் பெண்கள். ஒரு நாள் சுசீலா நீலாவின் வீட்டிற்குப் போகிறாள்.]

நீலா : வா. சுசீலா; உன் தம்பியும் உன்னுடன் வருவானே. அவன் ஏன் இன்று வரவில்லை?

சுசீலா : தம்பிக்கு இன்று சிறிது சுரமாக இருக்கிறது. ஆகையால்தான் அவன் வரவில்லை.

நீலா : நாம் படிக்கும் அறைக்குப் போவோம். வா. என் மாமா நேற்று எனக்கு

ஒரு கதைப் புத்தகம் கொடுத்தார். அதைப் படிப்போம். [இருவரும் நீலாவின் அறையில் உட்கார்ந்து படிக்கிருர்கள்.]

சுசீலா : இது என்ன! நீலா! இங்கு ஈக்கள் இவ்விதம் மொய்க்கின்றன? [சுற்றிலும் பார்க்கிருள்] ஓ! காரணம் தெரிகிறது. அதோ மாம்பழத்தோல், வாழைப் பழத்தோல் முதலி யன கிடக்கின்றன.

நீலா : இன்னும் வேலேக்காரி வரவில்லே; ஆகையால்தான் அறை இவ்விதம் இருக்கிறது.

சுசீலா : என்ன நீலா, நமது அறையை நாம் துப்புரவாக வைத்துக்கொள்ளக்கூடாதா? அதற்கு வேலேக்காரியை எதிர்பார்க்கலாமா? நமது வகுப்பறையை நாம் துப்புரவாக வைத்துக் கொள்ளவில்லேயா? அதுபோல நமது வீட்டிலுள்ள அறைகளேயும் நாம் துப்புர வாக வைத்துக் கொள்ள வேண்டும். வீடு சுத்தமாக இருந்தால்தான் நாம் தேகசுகத் துடன் வாழ முடியும்.

நீலா : சுசீலா, இதோ இப்பொழுதே இந்த அறையைத் துப்புரவு செய்து விடு கிறேன், பார்.

[நீலா ஒரு துடைப்பம், ஒரு வாளியில் தண்ணீர், துடைக்கும் துணி, கூடை முதலியன கொண்டு

வருகிறுள். நீலாவும் சுசீலாவும் அறையைத் துப்புரவு செய்கிருர்கள்.]

சுசீலா : நீலா, இப்பொழுது உன் அறையைப் பார். எவ்வளவு துப்புரவாகவும் அழகாகவும் இருக்கிறது!

சுரம்	மொய்க்கின்றன	காரணம்
வேலேக்காரி	துப்புரவாக	சுத்தமாக
தேக சுகம்	வாழ	துடைப்பம்

கேள்விகள்

1. அறையில் ஏன் ஈக்கள் மொய்த்துக் கொண்டிருந்தன?
2. வீட்டின் அறைகளேத் துப்புரவு செய்ய என்னென்ன சாமான்கள் வேண்டும்?
3. வீட்டின் அறைகள் ஏன் சுத்தமாக இருக்க வேண்டும்?

பயிற்சி

கோடிட்ட இடத்தில் சரியான சொல்லே அமை :—

1. நீலாவும் சுசீலாவும் ——.
   (படிக்கிருள், படிக்கிருன், படிக்கிருர்கள்.)
2. இது நான் வசிக்கும் ——.
   (அரை, அறை)

பாடம் 29

வீட்டைத் துப்புரவாக வைத்துக் கொள்ளுதல்

1. நாம் வசிக்கும் வீடு சிறிய வீடாக இருந்தாலும் அதைச் சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும். அசுத்தமான வீடு பார்வைக்கு அழகாய் இராது ; அங்கு ஈக்களின் உபத்திரவம் ஏற்படும் ; வியாதியை உண்டு பண்ணும் கிருமிகளும் வந்து சேரும்.

2. வீட்டைச் சுத்தமாக வைத்துக் கொள்ள, வீட்டில் சேரும் குப்பை, பழத்தோல் கள், காய் கறிகள் அரிந்தபின் சேரும் கழிவுப் பொருள்கள், கிழிந்த காகிதத் துண்டுகள் முதலியவற்றை ஒரு கூடையில் உடனுக்குடன் போடவேண்டும். கூடையில் சேரும் குப்பை களைத் தெருவிலுள்ள குப்பைத் தொட்டியில் போடவேண்டும். தெருவில் கண்ட இடங்களில் குப்பைகளைக் கொட்டக் கூடாது.

3. நகரசுத்தி செய்வோர் இல்லாத கிரா மங்களில் கிடங்குகளைத் தோண்டிக் கொண்டு அவற்றில் குப்பைகளைப்போட்டு வரவேண்டும். கிடங்கில் சேரும் குப்பையை எரித்து விட வேண்டும் ; அல்லது மண்ணால் மூடிவிட வேண்டும்.

4. வீட்டை அடிக்கடி பெருக்கிச் சுத்தப் படுத்த வேண்டும். ஒட்டடையை எடுக்க வேண்டும். ஈரத் துணியால் வீட்டிலுள்ள மேசை, நாற்காலி, பீரோ, பெட்டி இவைகளைத் துடைத்துச் சுத்தம் செய்யவேண்டும்.

5. துணிகளைத் தாறுமாருகப் போடாமல் ஒழுங்காக வைத்துவர வேண்டும். சலவை செய்ய வேண்டிய அழுக்குத் துணிகளை ஒரு கூடையில் போட்டு வைக்க வேண்டும்.

6. வீட்டுச் சாமான்களை அவைகளுக்கு ஏற்பட்ட இடங்களில் வைத்து வரவேண்டும்.

7. மூக்குச் சளியைப் போக்கின பிறகு கைகளைச் சுவரில் துடைக்கக் கூடாது.

8. வீட்டின் சுவர்களுக்கு வருஷத்தில் ஒரு முறையாவது வெள்ளை அடிக்க வேண்டும்.

9. வீட்டின் அருகில் சாக்கடை நீரைத் தங்கவிடலாகாது.

10. இதுபோல நாம் செய்து வந்தால் வீடும் வீட்டின் சுற்றுப்புறமும் அழகாகக் காணப்படும். நாமும் தேகாரோக்கியத்துடன் வாழலாம்.

பார்வைக்கு	உபத்திரவம்	கிருமிகள்
கழிவுப்பொருள்	உடனுக்குடன்	கிடங்கு
அடிக்கடி	ஒட்டடை	தாறுமாருக
சலவை செய்ய	மூக்குச்சளி	தேகாரோக்கியம்

கேள்விகள்

1. வீட்டில் சேரும் குப்பைகளை உடனுக்குடன் எங்கே போடவேண்டும்?

2. நகரசுத்தி செய்வோர் இல்லாத ஊரில் வீட்டுக் குப்பையை அப்புறப் படுத்துவது எப்படி?

3. சுவர்களை எவ்விதங்களில் அசுத்தப்படுத்தக் கூடாது?

பயிற்சி

கீழ்க்கண்ட வாக்கியங்களில் கோடிட்ட இடத்தில் சரியான சொல்லை அமைத்து எழுது :—

அடிக்கடி, சுத்தமாக, உடனுக்குடன்

1. நாம் வீட்டைச் —— வைத்துக்கொள்ள வேண்டும்.

2. குப்பையை —— கூடையில் போட வேண்டும்.

3. வீட்டை —— பெருக்கிச் சுத்தம் செய்ய வேண்டும்.

பாடம் 30

எறும்புகள்

ராமன் : அண்ணு, இந்த எறும்புகளைப் பார். இவை என்ன செய்கின்றன ?

முருகன் : தம்பி, இவை இரையை இழுத்துக் கொண்டு போகின்றன. எறும்புகளுக்கு வாசனை பிடிக்கும் சக்தி அதிகம் உண்டு. அவை மோப்பத்திஞல் பண்டங்கள் உள்ள இடங்களை அறியும். தம் இனத்துடன் சாரை சாரையாகப் போகும். இரையை எடுத்துக் கொண்டு வரும்.

ராமன் : அண்ணு, இவை இரையை எடுத்துக் கொண்டு எங்கே போகின்றன ?

முருகன் : இவை தம் புற்றுக்குப் போகின்றன.

ராமன் : புற்று என்ருல் என்ன ?

முருகன் : எறும்பு வாசம் செய்யும் இடத்தைப் புற்று என்று சொல்கிருேம். எறும்புப் புற்றுகளைச் சாதாரணமாக மரம் செடிகள்

உள்ள இடங்களில் பார்க்கலாம். எறும்புப் புற்றினுள் அநேக பாதைகளும் சின்னஞ் சிறு வீடுகளும் இருக்கும். எறும்புப் புற்று எறும்பு களுக்கு ஒரு பட்டணம் போல் இருக்கும்.

ராமன் : அண்ணு, எல்லா எறும்புகளும் ஒரே மாதிரியாக இல்லையே. அது என்ன அப்படி ?

முருகன் : தம்பி, எறும்புகளில் பல வகைகள் உண்டு. சிற்றெறும்பு, கட்டெறும்பு, சுள்ளெறும்பு என்பனவற்றை நாம் சாதாரண மாகப் பார்க்கிறோம்.

ராமன் : இதோ ஊர்ந்து செல்லும் எறும்புகளுக்கு என்ன பெயர் ?

முருகன் : இவை கட்டெறும்புகள்.

ராமன் : அண்ணு, அதோ பார். சில கட்டெறும்புகளுக்கு இறக்கைகள் இருக் கின்றன. ஏன் எல்லா எறும்புகளுக்கும் இறக்கைகள் இல்லை ?

முருகன் : தம்பி, கட்டெறும்புகளில் சில கட்டெறும்புகளுக்குத்தான் இறக்கைகள் உண்டு. இறக்கை உள்ளவைகளில் சிறுத்து இருப்பவை ஆண் எறும்புகள் ; பெருத்து இருப்பவை பெண் எறும்புகள் ஆகும். தவிர, எறும்புகளை ராஜா எறும்பு, ராணி எறும்பு,

வேலைக்கார எறும்பு என மூன்று வகைகளாகப் பிரிக்கலாம். எறும்புகள் எப்பொழுதும் சுறு சுறுப்பாகவே இருக்கும். எறும்புகளைப் போல நாமும் எப்பொழுதும் சுறுசுறுப்பாக இருக்க வேண்டும்.

இரை	வாசனை	சக்தி
மோப்பம்	இனம்	சாரை சாரையாக
புற்று	பட்டணம்	வாசம் செய்யும்
ஒரே மாதிரி	ஊர்ந்து	சின்னஞ் சிறு
சிறுத்து	பெருத்து	தவிர

கேள்விகள்

1. எறும்புப் புற்று என்றால் என்ன ?
2. எறும்புப் புற்றுகள் சாதாரணமாக எங்கு இருக்கும் ?
3. எறும்பின் சில வகைகளைச் சொல்லு.
4. எறும்பின் குணங்கள் என்ன ?

பயிற்சி

'சிறுத்து' இதற்கு எதிரான அர்த்தமுள்ள வார்த்தை 'பெருத்து'. அதாவது 'சிறுத்து' என்பதன் எதிர்ப்பதம் 'பெருத்து'. இது போல் 'போ' என்பதன் எதிர்ப்பதம் 'வா'. எதிர்ப்பதங்களைக் கீழ்க்கண்டபடி எழுதலாம்.

சிறுத்து	×	பெருத்து	போ	×	வா
வேகமாக	×	மெதுவாக	அதிகம்	×	குறைவு
பல	×	சில	உண்டு	×	இல்லை



பாடம் 31

இரண்டு சிறுவர்கள்

காட்சி 1

(கோவிந்தன் என்ற வேலைக்காரச் சிறுவனும் உத்தமனும்)

கோவிந்தன் : உத்தமா, நேற்று உன் மாமா உனக்கு ஒரு பந்து வாங்கிக் கொடுத்தாரே, அந்தப் பந்து எங்கே ?

உத்தமன் : கோவிந்தா, அந்தப் பந்து என் பெட்டியில் இருக்கிறது.

கோவிந்தன் : உத்தமா, அந்தப் பந்தை எடுத்துக் கொண்டு வா. நாமிருவரும் விளையாடுவோம்.

உத்தமன் : விளையாடவா? இப்பொழுதா? இதோ நான் பந்தை எடுத்து வருகிறேன்.

(உத்தமன் பந்தைக் கொண்டு வருகிறான்.)

கோவிந்தா, எங்கே விளையாடலாம்?

கோவிந்தன் : ஐயா ஆபீசுக்குப் போயிருக்கிறார். அம்மா ஜவுளிக் கடைக்குப் போயிருக்கிறாள். வீட்டில் நாம் இருவரும்தான் இருக்கிறோம். ஆகையால் இந்த அறையிலேயே பந்தை வீசிப் பிடித்து விளையாடுவோம்.

(இருவரும் மாறிமாறிப் பந்தை வீசிப் பிடித்து விளையாடுகிறார்கள். அது மேசைவிளக்கு சிம்ணியின் மீது விழுகிறது. சிம்ணி கீழே விழுந்து உடைகிறது.)

உத்தமன் : ஐயோ! சிம்ணி உடைந்து போய்விட்டதே!

கோவிந்தன் : சத்தம் போடாதே, அம்மா வரும் சமயம் ஆயிற்று.

(தாயார் வருகிறாள்; மறைவில் நிற்கிறாள்.)

உத்தமன் : அம்மா, அப்பா கோபிப்பார்களே! என்ன செய்வது, கோவிந்தா?

கோவிந்தன் : உத்தமா, நீ சும்மா இரு. அம்மாவிடம் 'ஒரு பூனை இங்கே வந்தது. சிம்ணியைக் கீழே தள்ளி உடைத்துவிட்டது' என்று சொல்லிவிடுகிறேன். நீயும் அப்படியே தான் சொல்லவேண்டும். இல்லாவிட்டால்......

உத்தமன் : பூனை உடைத்ததாகவா? நான் பொய் சொல்லவே மாட்டேன்.

காட்சி 2

(உத்தமன் தாயார் அவர்களுக்கு முன் வருகிறான்.)

தாயார் : இது என்ன! சிம்னி உடைந்து கிடக்கிறது? யார் உடைத்தது?

உத்தமன் : அம்மா, நாங்கள் பந்தை வீசிப் பிடித்து விளையாடினோம். அது சிம்னியின் மீது தவறி விழுந்தது. சிம்னி உடைந்து விட்டது. எங்களை மன்னிக்க வேண்டும்.

தாயார் : கோவிந்தா, நீயும் உத்தமனும் பேசிக்கொண்டிருந்ததை நான் மறைவிலிருந்து கேட்டேன். நீ இவ்விதம், பொய் சொல்லத் துணிந்ததால் உனக்கு இவ்வீட்டில் இனி வேலை இல்லை.

கோவிந்தன் : [தலை குனிந்து கொண்டு] அம்மா, என்னை மன்னியுங்கள். இனிமேல் இவ்விதம் ஒருபொழுதும் செய்யமாட்டேன்.

தாயார் : சரி, உன் வேலைகளை இனி ஒழுங்காகச் செய்து வா. உத்தமா, நீ உண்மையே சொன்னதைக் கண்டு சந்தோஷம் அடைகிறேன். இதுபோல் எப்பொழுதும்

நீ உண்மையே பேசவேண்டும். உண்மை உரைப்பவர் உயர்வு அடைவர்.

ஆபீசு	ஜவுளிக்கடை	மாறிமாறி
சிம்ணி	உடைகிறது	சமயம்
மறைவில்	சும்மா இரு	தள்ளி
தவறி	மன்னிக்க	ஒழுங்காக
உரைப்பவர்	உயர்வு	சந்தோஷம்

கேள்விகள்

1. கோவிந்தனும் உத்தமனும் என்ன செய்து கொண்டிருந்தார்கள் ?
2. விளக்கின் சிம்ணி ஏன் உடைந்தது ?
3. கோவிந்தன் உண்மையை எவ்விதம் மறைக்க விரும்பினான் ?
4. பொய் சொல்லும்படி கோவிந்தன் தூண்டிய பொழுது உத்தமன் என்ன சொன்னான் ?
5. உத்தமனுக்குத் தாயார் கூறிய புத்திமதி என்ன ?

பயிற்சி

மேற்கண்ட நாடகத்தை நடித்துக் காட்டுங்கள்.

பாடம் 32

மகாத்மா காந்தி

1. பிள்ளைகளே, இந்தப் புத்தகத்தின் முகப்புப் படத்தைப் பாருங்கள். அது மகாத்மா காந்தி என்னும் பெரியாரின் படம் அல்லவா? அவர் 1889-ம் வருடம் போர்பந்தர் என்னும் ஊரில் பிறந்தார். அவருடைய தகப்பனர் பெயர் காபா காந்தி; தாயார் பெயர் குத்லிபாய். அவருடைய முழுப் பெயர் மோகனதாஸ் கரம் சந்து காந்தி என்பதாகும்.

2. மகாத்மா காந்தி இந்தியாவில் தம் படிப்பை முடித்துக் கொண்டதும் இங்கிலாந்துக்குச் சென்றார். அங்கே சட்டப் பரீட்சைக்குப் படித்தார்; அதில் தேறினர், உடனே இந்தியாவுக்கு வந்தார்; ராஜகோட்டையில் வக்கீலாய் இருந்தார்.

3. அக்காலத்தில் ஒரு வழக்கை நடத்துவதற்காக மகாத்மா காந்தி தென் ஆப்ரிக்காவுக்குச் சென்றார். அங்கு வெள்ளையர்கள் இந்தியர்களை மிகவும் கேவலமாக நடத்தி வந்தார்கள். இதைக் கண்டு மகாத்மா காந்தி வருந்தினர். அங்கேயே சில வருடங்கள் தங்கினர். இந்தியர்களுடைய பல கஷ்டங்களைப் போக்கினர்.

4. பின்பு, மகாத்மா காந்தி இந்தியாவுக்கு வந்தார். இந்திய மக்களின் நிலையை உயர்த்தப் பாடுபட்டார். இந்திய மக்கள் அவரைத் தலைவராகக் கொண்டார்கள். அவர் மக்களுக்கு வழிகாட்ட ஆரம்பித்தார். அரசாங்கத்தார் மகாத்மா காந்தியையும் வேறு பல தலைவர்களையும் அடிக்கடி சிறையில் அடைத்து வந்தனர். முடிவில் மகாத்மா காந்தியின் உழைப்பின் பயனாக 1947-ம் வருடம் ஆகஸ்ட் மாதம் 15-ம் தேதி நாம் சுதந்திரம் பெற்றோம்.

5. நாம் மகாத்மா காட்டிய வழிகளைப் பின்பற்றி நடக்கவேண்டும். பொய் சொல்லக் கூடாது. எல்லோரும் ஒற்றுமையாக இருக்க வேண்டும். ஒவ்வொருவரும் நூல் நூற்க வேண்டும்; கதர் ஆடையை அணிய வேண்டும்.

முகப்பு	பரீட்சை	வழக்கு	சிறை
கேவலமாக	மக்கள்	சுதந்திரம்	ஒற்றுமை

கேள்விகள்

1. மகாத்மா காந்தி தென் ஆப்ரிக்காவில் ஏன் சில வருடங்கள் தங்கினார் ?
2. அவர் காட்டியுள்ள சில வழிகளைச் சொல்.

பயிற்சி

உன் வகுப்பறையில் மகாத்மா காந்தியின் படம் ஒன்றைத் தொங்கவிடு.

உலகநீதி

1. ஓதாமல் ஒரு நாளும்
   இருக்க வேண்டாம்.

2. ஒருவரையும் பொல்லாங்கு
   சொல்ல வேண்டாம்.

3. மாதாவை ஒரு நாளும்
   மறக்க வேண்டாம்.

4. வஞ்சனைகள் செய்வாரோடு
   இணங்க வேண்டாம்.

5. போகாத இடந்தனிலே
   போக வேண்டாம்.

6. அஞ்சாமல் தனி வழியே
   போக வேண்டாம்.

7. அடுத்தவரை ஒரு நாளும்
   கெடுக்க வேண்டாம்.

8. நெஞ்சாரப் பொய் தன்னைச்
   சொல்ல வேண்டாம்.

9. நஞ்சுடனே ஒரு நாளும்
   பழக வேண்டாம்.

10. தனந்தேடி உண்ணாமல்
    புதைக்க வேண்டாம்.

11. தருமத்தை ஒரு நாளும்
மறக்க வேண்டாம்.

12. குற்றமொன்றும் பாராட்டித்
திரிய வேண்டாம்.

13. கொலைகளவு செய்வாரோடு
இணங்க வேண்டாம்.

14. கற்றவரை ஒருநாளும்
பழிக்க வேண்டாம்.

15. கருதாமல் கருமங்கள்
முடிக்க வேண்டாம்.

16. வார்த்தை சொல்வார் வாய்பார்த்துத்
திரிய வேண்டாம்.

17. மதியாதார் தலைவாசல்
மிதிக்க வேண்டாம்.

18. மூத்தோர்சொல் வார்த்தைதனை
மறக்க வேண்டாம்.

19. முன்கோபக் காரரோடு
இணங்க வேண்டாம்.

20. தெய்வத்தை ஒரு நாளும்
மறக்க வேண்டாம்.

13642

BTR
786

NELLAI TAMIL VACHAGAM

BOOK II

By

Vidwan P. Arumuga Perumal

S. R. SUBRAMANIA PILLAI
PUBLISHERS — TINNEVELLY JN

0-5-0